செ. கு. எண்: 039 நாள்: 07.03.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்

## "சர்வதேச மகளிர் தின" வாழ்த்துச் செய்தி

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்''

என்ற மகாகவி பாரதியார் அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப, பெண்களின் சிறப்பினையும், மாண்பினையும் போற்றும் வகையிலும், சமுதாய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பினை உலகிற்கு உணர்த்திடும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 8–ஆம் நாள் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளில் அனைத்து மகளிர்க்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களை போற்றிடும் வகையில் நம் நாட்டைத் தாய் திருநாடு என்றும், மொழியை தாய்மொழி என்றும், நதிகளுக்கு பெண் பெயர்களையும் வைத்து, நாம் மகிழ்கிறோம். அத்தகைய போற்றுதலுக்குரிய பெண்களின் வாழ்வு மேன்மையுற, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், பெண் சிசுக் கொலையைத் தடுத்திட தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டம், வளரிளம் பெண்களுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கர்ப்பிணி பெண்களுக்கு ஒன்பது மாத காலம் மகப்பேறு விடுப்பு, இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம், விலையில்லா கறவை மாடு மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தது, இந்தியாவிற்கே முன்னோடியாக பெண்களுக்கு எதிரான குற்றங்களை களைந்திட 13 அம்ச திட்டம், வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பான வசிப்பிடத்தில் தங்கிட பணிபுரியும் மகளிருக்கான விடுதி, வீர தீர பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது, சிறந்த பெண்மணிக்கு அவ்வையார் விருது, வரலாறு காணாத வகையில் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகித இடஒதுக்கீடு வழங்கியது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா போன்ற எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் மகளிர் நலத் திட்டங்களை சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை 12,000 ரூபாயிலிருந்து 18,000

ரூபாயாக உயர்த்தியது, உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் ''அம்மா இருசக்கர வாகனத் திட்டம்'' போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்களை மகளிர் மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, பெண்களுக்கான பாதுகாப்பான நகரங்களின் பட்டியலில் கோயம்புத்தூர் மாநகரமும், பெண்களுக்கான பாதுகாப்பான பெருநகரங்களின் பட்டியலில் சென்னை பெருநகரமும் இடம்பெற்றிருப்பது, பெண்களின் பாதுகாப்பில் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த அக்கறை கொண்ட அரசு என்பதை மீண்டும் மெய்ப்பித்து இருக்கின்றது. மேலும், பெண் உரிமை, பாலியல் வன்கொடுமை மற்றும் பணியிடங்களில் உருவாகும் அசாதாரண நிலை குறித்து புகார் தெரிவிக்க, பெண்களுக்காக பிரத்யேகமாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இணைய தளம் மூலம் "SHe Box" (Sexual Harassment electronic Complaint Box) புகார் பெட்டி ஏற்படுத்தப்பட்டு சமூக நலத்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மருத்துவ உதவி, சட்ட உதவி மற்றும் ஆலோசனைகள் வழங்கிட "One Stop Centre" ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான சமூக நலத்திட்டங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

தங்கள் வாழ்வில் எதிர்வரும் இடர்களை அஞ்சாமல் உறுதியுடன் எதிர்கொண்டு, அவற்றை வெற்றிப் படிகளாக்கி, இருளை நீக்கும் ஒளிவிளக்காக பெண்கள் உலகில் உயர்ந்து விளங்கிட வேண்டும் என்று வாழ்த்தி, மீண்டும் ஒருமுறை எனது மகளிர் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**